அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை இல. 2/97( v )

எனது இல: ஈ1/4/10,
அரசாங்க நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அ
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு-07.
1999. நொவம்பர்.......

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
மாகாண சபைகளின் பிரதான செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
அனைவருக்கும்,

சம்பள முரண்பாட்டுக் குழுவின் விதப்புரைகளைச்
செயற்படுத்தல்-1997-
எழுதுநர் மற்றும் அதனை ஒத்த சேவைகளில் உள்ள
அலுவலர்களின் சம்பளங்கள்

1997.11.12 ஆம் தேதிய 2/97(111)ஆம் இலக்க, அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி எழுதுநர், மற்றும் அதனை ஒத்த சேவைகளில் உள்ள அலுவலர்களின் சம்பளங்கள் மாற்றியமைக்கப் படுகையில், 1994.08.01 ஆம் தேதிக்கும் 1996.12.31 ஆம் தேதிக் இடைப்பட்ட காலப் பகுதியினுள் வகுப்பு 1இற்கும், அதியுயர் தரத்திற்கும் பதவியுயர்வளிக்கப்பட்டவர்களால் பெறப்பட்ட சம்பளத்துடன் ஒப்பிடுகையில் 1994.08.01ஆம் தேதிக்கு முன் பதவியுயர்வளிக்கப்பட்டவர்களின் சம்பளங் சம்பள முரண்பாடொன்று எழுந்துள்ளது.

2. 1994.08.01ஆம் தேதியன்று உள்ளபடியாக சேவையிலிருந்த எழுதுந மற்றும் அதனை ஒத்த சேவையின் வகுப்பு 1இல் உள்ள அலுவலர்கள், பொது எழுதுநர் சேவையின் அதியுயர் தரத்தில் உள்ள அலுவலர்கள் ஆகியோரைப் பொறுத்தவரை 1997.01.01 ஆம் தேதியன்று முதல் பயனுறும் வகையில் 2/97(111)ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையின் 3:5ஆம் பந்தியை நீக்கிவிடுவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

3. இதற்கமைய, 1994.08.01 ஆம் தேதியன்று உள்ளபடியாக சேவை யிலிருந்த எழுதுநர், மற்றும் அதனை ஒத்த சேவையின் வகுப்பு 1ஐச் சேர்ந் அலுவலர்களினதும், பொது எழுதுநர் சேவையின் அதியுயர் தரத்தைச் சேர்ந்த அலுவலர்களினதும் சம்பளங்களை மாற்றியமைப்பதற்கு (பின்னிணைப்பு 1இலும், பின்னிணைப்பு 11இலும் காட்டப்பட்டுள்ளவாறு) நடவடிக்கைகள் மேற்கொள்ளப் வேண்டும்.

2....(02)

4. 1999ஆம் ஆண்டிற்கான நிதி ஏற்பாடுகளுக்குள் போதியளவு சேமிப்புகள் இருக்குமாயின், 1999 நொவெம்பர், திசெம்பர் மாதங்களுக்கான சம்பளங்களை செலுத்த முடியும். 1997.01.01 முதல் 1999.10.31ஆம் தேதிக்குள்ளான சம்பள நிலுவைகளைச் செலுத்துமுகமாக, 2000 ஆம் ஆண்டுக்கான மதிப்பீட்டில் போதியளவு நிதி ஏற்பாடுகள் சேர்த்துக் கொள்ள ஆவன செய்யப்படல் வேண்டும்.

5. இச்சுற்றறிக்கையின் ஏற்பாடுகளானவை, 1994.08.01 ஆம் தேதியன்று உள்ளபடியாக சேவையிலிருந்த அலுவலர்களுக்கும், பொது எழுதுநர் சேவையின் புதியுயர் தரத்திலிருந்த அலுவலர்களுக்கும் மட்டும் பொருந்துவனவாகும். 29/94 ஆம் இலக்க, அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையில் கூறப்பட்டவைகளான பொது எழுதுநர் சேவை, தட்டெழுத்தாளர் சேவை, சுருக்கெழுத்தாளர் சேவை, கணக்குப் பதிவுநர் சேவை, சிறாப்பர் சேவை, களஞ்சியக் காப்பாளர் சேவை என்பன எழுதுநர், அதனை ஒத்த சேவைகள் எனக் கணிக்கப்படுகின்றன.

6. இச்சுற்றறிக்கையானது பொது திறைசேரியின் ஒருப்பாட்டுடன் விடுக்கப் பட்டுள்ளது.

ஒப்பம்/ (மகிந்த பந்துசேன.)

செயலாளர்.

அரசாங்க நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு.